[1979 பிப்ரவரி 24

ஆரணி மாட்டுச் சந்தை.

* வினா எண். 165—திரு. வீ. அர்ச்சுனன் :—மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

ஆரணி நகரத்தின் மத்தியில் உள்ள மாட்டுச் சந்தையினை பையூர் குளக்கரைக்கு மாற்றுவது குறித்த கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து— இல்லை.

திரு. வீ. அர்ச்சுனன் : தலைவரவர்களே, மக்கள் நெரிசல் காரணமாகவும், போக்குவரத்துக்கு இடையூறாக இருப்பதன் காரணமாகவும் ஆரணி நகரின் மத்தியில் இருக்கிற மாட்டு சந்தையை பையூர் குளக்கரைக்கு மாற்றுவது சம்பந்தமாக 1971 ஆம் ஆண்டிலேயே நகராட்சி தீர்மானம் போட்டுள்ளது. அதன் பேரில் அந்த மாட்டு சந்தையை மாற்றியமைக்க அரசுக்கு உத்தேசம் உண்டா ? மக்களிடமிருந்து அதுபற்றி ஏதாவது கோரிக்கை வந்துள்ளதா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அப்படி கோரிக்கை எதுவும் வரவில்லை. ஆனால் நகரமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் புதிதாக ஒரு மாட்டு சந்தையை செட்டிகுளம் அருகில் ஷபியுல்லா தெருவில் அமைக்க நகராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

பள்ளிப்பத்து ஊராட்சியில் சமுதாயக் கிணறுகள்.

* வினா எண். 166—திரு. இரா. அமிர்தராஜ்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி மாவட்டம், திருச்செந்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட பள்ளிப்பத்து ஊராட்சி செங்குழியிலும், எருசலேமிலும் சமுதாய நலக் கிணறுகள் தோண்டப்பட்டு முடிவு பெறாமல் பல ஆண்டுகளாக இருப்பதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில் அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?